[1996 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா . எண் 214, திரு. செங்கை சிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

214—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலைய இடமாற்றம்

***408—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தில் ஏற்படும் இட நெருக்கடியைத் தவிர்க்க வேறு இடம் தேர்ந்தெடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செங்கை சிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பஸ் நிலையம் குறித்து எம்.எம்.டி.ஏ.-வின் வேண்டுகோளுக்கு இணங்க, 'Kirloskar Consultancy Agency' சென்னையிலே உள்ள போக்குவரத்து நெருக்கடி, மாசுக்கட்டுப்பாடு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சென்னையில் புறநகரங்களிலே பேருந்து நிலையத்தை மாற்ற வேண்டுமென்ற ஆலோசனையை அரசுக்கு வழங்கியிருக்கிறது. எனவே, உடனடியாக, இப்போது இல்லையென்றாலும், அடுத்த ஆண்டாவது அந்தப் பேருந்து நிலையத்தை புறநகருக்கு மாற்றும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பாக சென்னையிலே நெருக்கடியை அகற்றுகின்ற வகையிலே புறநகர் பகுதிகளாக இருக்கின்ற கோயம்பேடு, மாதவரம் ஆகிய இரண்டு பகுதிகளில் புதிய பேருந்து நிலையம் உருவாக்குவதற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

1996 ஆகஸ்ட் 22]

அதற்கான பணிகள் துவங்கப்பட இருக்கின்றன. அந்த இரண்டு இடங்களுக்கும் பேருந்து நிலையங்கள் மாற்றப்படுமானால் இப்போது திருவள்ளுவர் பேருந்து நிலையத்தில் இருக்கின்ற நெரிசல் குறையும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கை சிவம்: சென்னை பாரிமுனையிலுள்ள வெளியூர் பஸ் நிலையம் சென்னையினுடைய அவமானச் சின்னமாக இருக்கிறது. காரணம் அங்கே சுகாதாரச் சீர்கேடும் மற்றும் மழைக் காலங்களில் பஸ் நிலையத்திற்குள் நுழைய முடியாத நிலையும் இருப்பதை, பல உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே, ஹைதராபாத், பெங்களூர், மும்பை போன்ற தலை நகரங்களில் இருப்பதைப்போல் திருவள்ளுவர் பஸ் நிலையத்தோடு அதையும் இணைத்து நவீன பஸ் நிலையம் அமைக்கும் ஆலோசனை அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் நான் அளித்த பதிலிலேயே இதற்குண்டான பதிலும் அடங்கியிருக்கிறது. அந்த பகுதியில் இருக்கின்ற பேருந்து நெருக்கடியை அகற்றுவதற்காக புறநகர்ப் பகுதிகளிலே, குறிப்பாக கோயம்பேடு, மாதவரம் போன்ற பகுதிகளில் பேருந்து நிலையங்கள் கட்டப்பட இருக்கின்றன. அவை உருவாக்கப்படுகிறபோது, திருவள்ளுவர் பேருந்து நிலையத்திலும், பாரிமுனையிலே இருக்கின்ற பேருந்து நிலையத்திலும் நெருக்கடிகள் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீ. அ. வைத்தியலிங்கம்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்குப் புறம்பாக இயங்கிய தனியார் பேருந்துகள் அரசால் கைப்பற்றப்பட்டு காவல் நிலையங்களில் வீணாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தோடு இணைத்து மக்களுக்குப் பயன்படும் வகையில் உபயோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 'ஆம்னி' பஸ்களைப் பற்றி குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அந்தப் பேருந்துகள் எல்லாம் புதுவையிலே வரியைக் கட்டிவிட்டு இங்கே ஓடிக்கொண்டிருந்த காரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கைப்பற்ற

TRUTH ALONE TRIUMPHS

வேண்டுமென்ற நோக்கம் அரசுக்கு இல்லை. ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற உரிமத்தைத் தவறாகப் பயன்படுத்துகிற காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. தமிழக அரசின் சார்பாகவே, அவர்களுக்கான அந்த வரியை உயர்த்தி இங்கே அவைகளுக்கு அனுமதி வழங்கலாமா என்ற புரபோசலும் அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; திரு. ம. அப்துல் லத்தீப்.

முற்பகல் 10-10

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம் உயர்நீதிமன்றத்தினுடைய வளாகத்திற்கு அருகில் இருக்கிறது. அந்தப் பேருந்து நிலையம் அங்கே இருக்கிற காரணத்தினால், உயர் நீதிமன்றத்தில் மேற்கொண்டு கட்டிடங்கள் கட்டுவதற்கும், வழக்குரைஞர்களுக்கு தனியாக அறைகள் கட்டுவதற்கும் பாதகமாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. மேலும் அங்கு நெரிசலும் அதிகமாக இருக்கிறது. எனவே, பேருந்து நிலையத்தை மாற்றி வேறு இடத்தில் அமைத்தால் உயர் நீதிமன்றத்திற்கு வசதியாக இருக்கும். இது குறித்து அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாகக் குறிப்புகள் எதுவும் அரசிடம் இல்லை. மேலும் இது போன்ற கோரிக்கைகள் எதுவும் உயர் நீதிமன்றத்திலிருந்து இதுவரை வந்ததாகவும் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் வழக்குரைஞர் என்பதால் இந்தக் கோரிக்கையை வைத்து இருக்கிறார். அவர் உயர் நீதிமன்றத்திற்கே செல்லாத வழக்குரைஞராக இருந்தாலும் அவருடைய நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். இருந்தாலும் கூட, பேருந்துகளின் நெருக்கடியைக் கருதியும் கூட அந்த இடத்திலிருந்து பேருந்து நிலையத்தை எடுத்துவிடமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், கோயம்பேட்டிலும், மாதவரத்திலும் இரண்டு பெரிய பேருந்து நிலையங்களை நிறுவ இருப்பதாக கூறியிருக்கிறார்கள். அவை எப்போது

1996 ஆகஸ்ட் 22]

நிறுவப்படும் என்று அறிய விரும்புகிறேன். மேலும், இப்போது பிராட்வே பேருந்து நிலையத்தில் நிறைய ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அதன் காரணத்தினால் பேருந்தில்கூட ஏற முடியாத ஒரு நிலையும் இருக்கிறது. ஆகவே, தாங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு இணைந்து செயல்பட்டு, அந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றியும், அங்கே இருக்கக்கூடிய சில சமூக விரோதிகளை அங்கேயிருந்து அப்புறப் படுத்துவதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறீர்களே?

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னை உயர் நீதிமன்றத்திற்குப் போகாத வழக்குரைஞர் என்று சொன்னார். ஒரு தடவை அங்கே நாங்கள் போய் விட்டால் மறுபடியும் மரணம் வரையில் மீள்வதில்லை. என்னுடைய கௌன் இன்னும் என்னிடம் இருக்கிறது. அடிக்கடி 'ஆர்க்யுமெண்ட்'-க்காக போகிறேன். இப்படி, எனக்கு வருகின்ற கட்சிக்காரர்களை எல்லாம் தடுக்கக்கூடிய அளவிலே அவர் என்னை உயர் நீதிமன்றத்திற்கு போகாத வழக்குரைஞர் என்று சொன்னதைத் தான் ஆட்சேபிக்கிறேன். எனவே அவர் சொல்லியதை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் போய் வந்து கொண்டிருக்கிறார். (சிரிப்பு)

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர், 'டாக்டர் பொன்முடி' என்று போட்டுக்கொள்கிறார். அப்படி என்றால், அவர் என்ன டாக்டர் என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எனக்குப் பதிலே சொல்லவில்லையே.

[1996 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவருக்குப் பதில் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் நான் சொன்னவையிலேயே இதற்கான பதில் அடங்கி இருக்கிறது. புறநகர்ப்பகுதிக்கு பேருந்துகள் விரிவாக்கப்படும்போது அவர் சொன்ன நெரிசல்கள் எல்லாம் குறைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 215, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

215—

தமிழ்மொழியை உயர் தனிச் செம்மொழியாக அறிவித்தல்

***160—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர்தனிச் செம்மொழியாக (Classical Language) தமிழை அறிவிக்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ் மொழியை உயர் தனிச் செம்மொழியாக, "கிளாசிக்கல் லாங்க்வேஜ்" என அறிவிப்பதற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுக்கு, அவராகவே நேரடியாக கடிதங்கள் எழுத இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் விரைவில் அதற்கான தீர்வுகள் கிடைக்கும்.

டாக்டர் இ.எஸ்எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட 'தினமணி'யிலே தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். வடமொழிக்கு சற்றும் குறைவில்லாத உபநிடதங்கள், வேதங்கள் ஆகியவற்றுக்கும் மேலாக, ஈடாக உள்ள தேவாரம், திருவாசகம் ஆகியவைகளைக் கொண்டிருக்கிற தமிழ் மொழியை, தொன்மையான